**அ.வ.எண்.118/2018**
**பி.சா.2 : T.P.K.பிரசாத்**
**தேதி : 26.08.2025**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>மற்ற பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் கரூர் டவுன் வையாபுரி நகரில் குடியிருந்து வருகிறேன். வையாபுரி நகருக்கும் தும்பிவாடி கிராமத்திற்கும் இடையே 13 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். 2 ஆம் பிரதிவாதியின் தலைமையகம் சென்னையில் உள்ளது. தும்பிவாடி கிராமத்தில் 2008 ல் கிளை அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. 11.02.2008 அன்று மேற்சொன்ன எங்கள் ஸ்தாபனத்தின் கிளை தாவா சொத்தில் ஒரு பகுதியினையும் மற்றொரு பகுதியினை ரவிசந்திரன் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். 2008 க்கு முன்பாக வழக்கு சொத்தின் உரிமையும் சுவாதீனமும் உள்ளது எனக்கு தெரியும். 20.12.1892 தான் அவ்வாறு மேற்சொன்ன உரிமை வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் தாசில்தார் போட்ட உத்தரவின் பேரில்தான் தாவா சொத்தில் உரிமை தற்போது உங்களால் கோரப்படுகிறது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் தான் அந்த செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவாகும். மேற்சொன்ன பி.வா.சா.ஆ.3–ல் 20.12.1892 குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததை பார்த்துள்ளேன். நான் 20.12.1892 ஆண்டு தேதி மட்டும் தான் எனக்கு தெரியும். 20.12.1892 தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் பார்த்ததில்லை. கிரையபத்திரத்தில் கண்ட கிரையதாரர்களின் வாரிசுகள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம், விடுதலை ஆவணம் ஆகியவை மூலமாகத்தான் நீங்கள் கிரையம் வாங்கியுள்ளீர்கள் என்று

சொன்னால் சரிதான். 20.12.1892 கிரையப்பத்திரத்தில் கண்ட கிரையதாரர்களின் பெயர்களில் பட்டாவோ அல்லது கிஸ்தோ செலுத்தியுள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் வாங்குவதற்கு முன்பாக வழக்கு சொத்து சம்மந்தமான செட்டில்மெண்ட் தாசில்தார் நகலை வாங்கி பார்க்கவில்லை. எனக்கு கிரையம் கொடுத்த முன்பாகஸ்தர்களான சாவித்திரி, தனலட்சுமி, ராமசாமி, மனோகரன், இளவர் ஒருவர் ஆகியோர்கள் பெயரில் பட்டா இருந்தது. அவர்கள் நிலவரி கட்டியுள்ளார்கள். உங்களுக்கு கிரையம் கொடுத்த நபர்களோ, அவர்களுக்கு முன்பாகஸ்தர்கள் கட்டிய கிஸ்தை, பட்டாவை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் நான் கட்டிய கிஸ்தையும் பட்டாவையும் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 23.12.1910 தேதியிட்ட நிரந்தர குத்தகை பத்திரத்தை பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தை நான் நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மனுடன் இணைக்கப்பட்டிருந்ததை பார்த்துள்ளேன். மேற்சொன்ன வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாவா சொத்து ஆனூர்அம்மன் படிஸ்தலம் இனாம் புஞ்சை என்று கண்டுள்ளது என்று சொன்னால் அந்த ஆவணத்தை என்னால் படிக்க முடியவில்லை. எனக்கு பெரியாண்டிபூசாரியும், அவரது வாரிசுகள் யார் என்று தெரியாது. உங்களக்கு கிரையம் செய்தவர்களின் முன்னோர் பெரியாண்டிபூசாரியின் வாரிசுகள் பற்றி வா.சா.ஆ.6–ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அந்த ஆவணத்தை படிக்கவில்லை. நலாயினி என்பவர் குவாரி ஏற்படுத்தியது தாவா சொத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.18 நீங்கள் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கையோ அல்லது மேல்நடவடிக்கை எடுத்தார்களா என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை இது

குறித்து மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.19 மனு ரசீதில் இது சிவில் வழக்கு என்பதால் மேல்நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்து அறநிலையத்துறை உதவி ஆணையர் வழக்கு சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்ய போட்ட உத்தரவு செல்லாது எனக்கூறி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பி.வா.சா.ஆ.20 தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான் மேலும் அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.22 மனுவை உயர்நீதிமன்றத்தில் ரவிசந்திரன் என்பவர் அ.வ.எண்.585/2008 என்ற வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்து அது கீழமை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்ததை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் போட்ட சீராய்வு மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண் 59/2019 ல் போடப்பட்ட ஆணையாளரின் அறிக்கையும், வரைபடமும் தான் பி.வா.சா.ஆ.23 மற்றும் 24. அந்த வழக்கின் பிராது மற்றும் அது சம்மந்தப்பட்ட தீர்ப்புரையை நீங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண்.59/2019 ல் நாங்கள் தான் தாவா சொத்தின் ஒரு பகுதியில் இருப்பதை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. வழக்கு சொத்தில் தியான மண்டபம் மற்றும் இதர கட்டிடங்கள் கட்டுவதற்கும் பஞ்சாயத்தில் நீங்கள் வரைபடம் கொடுத்து அதற்கு அனுமதி பெற்றுள்ளீர்களா என்றால் தடையில்லா சான்றிதழ் பஞ்சாயத்து தலைவர் வழங்கியுள்ளார். நீங்கள் கூறும் மேற்சொன்ன உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் கட்டிடம் கட்டியதற்கான செலவு கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. அந்த கட்டிடம் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் வாங்கிய பட்டா நீங்கள் கிரையம் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில்

தான் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனூர் அம்மன், ஜெயங்கொண்டம் அம்மன் ஆகியவை தும்பிவாடியில் மிகப்பழைமையான கோவில்கள் என்று சொன்னால் கற்கள், முட்புதர் மட்டும் தான் அங்கு உள்ளது. வாதி கோவில்களான ஆனூர்அம்மன், ஜெயங்கொண்டம்மன் ஆகிய 2 கோவில்களும் அங்கு இல்லை என்பதை நீங்கள் உங்கள் பிராதில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ரவிசந்திரன் கிரையம் பெற்ற தாவா சொத்தின் ஒரு பகுதியை 1ஆம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றும் மீதி சொத்தை வீட்டு மனைகளாக பிரித்து பல பேர்களுக்கு விற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து வாதிகளுக்கு உரிமை உள்ள சொத்து என்றும் அதில் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.